RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
DOI: 10.34256/irjt22s248
OPEN ACCESS

# இறையியல் சுட்டும் ஆடல்

சத்தியப்பிரியா கஜேந்திரன் [அ, *]

[அ] நடனத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம், இலங்கை

# Theological Represent Dance

Sathyapriya Gaajenthiran [a, *]

[a] Department of Dance, University of Jaffna, Thirunelvely, Jaffna, Sri Lanka

* Corresponding Author: gajansathya@gmail.com

Received: 13-03-2021
Revised: 31-01-2022
Accepted: 04-02-2022
Published: 28-02-2022

Check for updates

**ABSTRACT**

The study of the theatrical shooting dance seeks to explore the specialties of dance through the songs of the Nayanmars. The four epics of the Nayanmarsreveal the dress through theology. However, this study seeks to identify the theatrical manifestation of Thirugnanasambandar Thirunavukkarasar's epistles centered on only a few verses with the help of theological texts. In that sense the twists and turns of these two express the divine dress through theology. The Nayanmars, who look at Natarajan as a dancer, see the Lord's robe, which has risen in various temples, from different angles. The theology embedded in their rhymes and the accompanying dance give the opportunity to see the dress in theology. The theological findings of this study will be useful and relevant to the future researcher.

**Keywords:** Theological, Dance, Thirugnanasambandar, Thirunavukkarasar

## முன்னுரை

அருளோடு கூடிய சிவ பரம்பொருளையே "திரு" எனக் கூறுவார் (திரு - பெறத்தக்க செல்வமாகும்). இதனை நாடி அடைந்ததன் பயனாக அடியார்கள் பெற்ற இன்பமானது அவர்கள் உள்ளத்திலிருந்து தோத்திரப்பாடல்களாக ஊற்றெடுத்தன. இப்பாடல்கள் தமிழகமெங்கும் அருவியாய் பாய்ந்தன. சமயகுரவர் நால்வரும் இறைவன் மீது அளவற்ற அன்புகொண்டு தம்மை தாழ்த்தியும் பிறரை மதித்தும் சைவசமயத்தை வளர்ச்சியடைய செய்தனர். சிறுவயதிலிருந்தே இன்னிசைச் செந்தமிழ்ப் பாடல்களால் இறைவனைப் போற்றியவர் திருஞானசம்பந்தர். "தோடுடைய செவியன் விடையேறி ஓர் தூவெண் மதிசூடி" என்ற அற்புதத்திருப்பதிகம் இவரின் முதல் திருப்பதிகமாகும். திருநாவுக்கரசர் சமணசமயத்திலிருந்து மீண்டு சைவசமயத்தை நாடிநிற்கையில் "கூற்றாயினவாறு விலக்ககலின்..." என இறைவனை வேண்டிநிற்கின்றார். இவ்வாறு நாயன்மார்களின் திருப்பாசுரங்கள் இறையுணர்வை அள்ளித்தருபவையாக உள்ளன. அவ்வகையில் நாயன்மார்கள் இறைவனின் ஆடலை இறையியலோடு எவ்வாறு தொடர்புபடுத்தி பார்க்கின்றனர் என்பதை கண்டறியும் நோக்கில் இவ் ஆய்வுக்கட்டுரை அமையப்பெறுகிறது

உலக இயக்கம் புலன்களுக்குப் புலப்படாத ஏதோ ஒரு சக்தியால் இயங்குகின்றதென்பதை ஆரம்ப காலத்தில் மனிதன் ஓரளவு அறிந்திருந்தான். அவன் அறியக் கூடிய சக்தியாக இருந்த சூரியனை வணங்கத் தொடங்கினான். காலகதியில் மனிதனின் சகல நடவடிக்கைகளுக்கும் இறைவனே காரணகர்த்தாவாகத் திகழ்ந்தான் என்பதனை உணர்ந்துகொண்டான். சிந்துவெளி நாகரிக காலத்தகழ்வுகள் அக்காலத்து இறை வழிபாட்டை நமக்கு உணர்த்துகின்றன. பின் எழுந்த சங்ககால நூல்களும்

இறைவழிபாட்டை எடுத்துக் கூறுகின்றன. இறைவழிபாடு மனித வாழ்வில் இன்றியமையாத அம்சமாகக் கலந்துள்ளது.

இறையியல் என்பது இறைவனின் தன்மை, மனிதனுக்கும் இறைவனுக்குமிடையிலான உறவு, சமய நெறிமுறைகள், கோட்பாடுகள், நம்பிக்கை, அருள் போன்றவற்றைக் குறித்து நிற்கின்றது. (Valviyar kalanjiyam, 2002) இறை எனும் சொல் இறை + இயல் என்ற இரு சொற்களின் இணைப்புச் சொல்லாகக் காட்டப்படுகின்றது. இறை என்பது கடவுளையும், இயல் என்பது பல பொருள் தரும் சொல்லாகவும் விளங்குகின்றது. இங்கு இயல் எனும் சொல் பொதுவாக இயற்றமிழைக் குறிக்கிறது. இயல், இசை, நாடகமெனும் வழக்கில் அது பெரும்பாலும் உரைநடைத் தமிழையே சுட்டுகின்றது. எனவே இவ்வழக்கில் இறையியல் என்பது இறைவனைப் பற்றிய உரைநடைப் பேச்சு அல்லது எழுத்து எனப் பொருள்படும். மேலும் இறைவனைப் பற்றிய பல்வேறு எண்ணங்களை ஒன்றோடு ஒன்று இணைத்துப் பொருத்தி, விரித்து, விளக்கி, முரண்பாடுகளைக் களைந்து, தொகுத்து, தொடர்புபடுத்தித் தருவதென்றும் பொருள் கொள்ளலாம் (Alphonsa, 1989). பிளேட்டோ போன்ற தத்துவ அறிஞர்களின் பார்வையில் இறையியல் எனும் சொல் புராணப் படிப்பினைகளையும், இயற்கைக்கு அப்பாற்பட்ட வரலாற்றையும் காண்பதாக கூறப்படுகின்றது.

சாதாரணமாக வாழும் மனிதர்களினால் இறையுண்மையை ஒரு போதும் உணர முடியாது. ஏனெனில் இவர்கள் பஞ்சேந்திரியங்களின் (உலக மாயை வசப்பட்டகளின்) வழி மனதைச் செலுத்தி அதனூடாகக் கிடைக்கப் பெறுகின்ற உலக இன்பங்களை அனுபவிக்க முனைவர். மறுபக்கத்தில் பேரருள் திறன்வாய்ந்த பூரண வடிவான இறைவனிடம் தம் மனதைத் திருப்பி ஆன்மீக நெறிக்குள் பிரவேசிக்க அவர்கள் ஒருபோதும் நினையர். இயல்பாகவே மனிதப் பிறவி எடுத்த சிலருக்கு தன்னுடைய மனதைக் கட்டுப்படுத்தும் ஆற்றலோடு ஆன்மீக நெறியை நாடி நிற்கும் தன்மையுண்டு. அவர்களால் இறைவன் பக்கம் மனதை குவித்து பக்தி மார்க்கத்தில் ஈடுபட்டு சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நெறிப்படி ஒழுகி பரிபூரணத் தன்மையை எய்துவதனூடாக பேரின்ப நிலையப் பெறுகின்றனர். இத்தகைய தன்மையோடு வாழ்ந்த மகான்களில் சைவசமயத்தைப் பொறுத்த வரையில் சம்பந்தர், அப்பர், சுத்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நாயன்மார்கள் எடுத்துக்காட்டாக விளங்குகின்றனர்.

அப்பர், சம்பந்தர் வாழ்ந்த காலப்பகுதியில் சமணசமயத்தவர்களினால் சைவ சமயத்தவர்களுக்குப் பெரும் அச்சறுத்தல் தோன்றியது. இத்தகைய சிக்கலான நிலையைத் தவிர்த்து சமயப்புரட்சி ஒன்றை மேற்கொண்டு அதன் மூலம், சைவத்தின் மேலான தன்மையை சைவ மக்களுக்கு உணர்த்தி அவர்கள் சமண சமயத்திற்குள் பிரவேசிப்பதை தடுத்துநிறுத்த அரும்பாடுபட்டனர். ஊர்கள் தோறும் சென்று அங்குள்ள இறைவனின் பெருமையையும், தலத்தின் பெருமையையும் மக்கள் மனதில் பதியத்தக்கவாறு செய்ய அருட்பாடல்கள் பலவற்றைப் பாடி சமண சமயத்தின் தாக்கத்திலிருந்து மக்களை விடுபடச் செய்தனர்.

ஆடற்கூத்தனான நடராஜனின் ஆடற் கோலங்களை பல்வேறு கோணங்களில் கண்ணுற்ற நாயன்மார்கள் அவன் பெருமையையும், ஆடலைற் சிறப்பையும் தமது பாடல்களில் பாடியருளினர். ஆடற்கலை ஆரம்பத்தில் சதிர், கூத்து. போன்ற பெயர்களினால் அழைக்கப்பட்டு தேவதாசிகளினால் இறை அர்ப்பணமாக ஆடப்பட்டது. பின்னர் பல இடர்களைத்தாண்டி 'பரதநாட்டியம்' என்ற அங்கீகாரத்தைப் பெற்று, இன்று தற்கால நிலைமைக்கேற்ப தன்னை வளப்படுத்திக் கொண்டுள்ளது. அத்தவகையில் ஆடற் கூத்தனில் இந்த ஆடல்களினூடாக நாயன்மார்களின் இறையியல் வெளிப்படுத்துமாற்றினைக் காண்போம்.

பொறிபுலன்களுக்கு அப்பாற்பட்ட சக்திதான் இறைவன் என்பதை,

ஒரு நாமம் ஒரு உருவம் ஒன்றுமில்லாக்கு

ஆயிரம் நாமம் சொல்லி.

என்ற பாடலூடாக மாணிக்கவாசகர் எடுத்துக் காட்டுகின்றார் (Manikkavasaka Swamikal, 2009).

இறைவன் ஆடல் அரசனாக மயானத்தில் தனது ஆடலை நிகழத்துகின்றான் என்பதை நாயன்மார்களின் அனேகமான பாடல்கள் எடுத்துக் காட்டுகின்றன.

சிவபெருமான் விடத்தைக் கண்டத்தில் தேக்கிவைத்து இருள் சூழ்ந்த மயானத்தில் உமையோடு நடனம் புரிகின்றான் என்பதை,

விடம்படு கண்டத்தினான் இருள்வெள்ளை மங்கையொடு

நடம்புரி கொள்கையினான்

என்ற பாடலூடாக சம்பந்தர் எடுத்துக் காட்டுகின்றார் (Thirugnanasampanthamurthy, 2009)

இறைவன் நடனக்கலையில் லயமும் இசை வண்ணமும் உடையவர். ஒரு காதில் தோடும் மறுகாதில் குழையும் அணிந்து திருநீறு பூசி அனல் வீசும் மயானத்தில் எரியும் நெருப்பின் ஒளி வீசுமாறு ஆடல் புரிகிறான் என்பதை,

தோடுடையார் குழைக் காதிற்

சூடுபொடி யார் அனல் ஆடக்

என்ற சம்பந்தரின் பாடல் வரிகளினூடாக அறியலாம் (Thirugnanasampanthamurthy, 2009).

இறைவன் மயானத்தில் ஆடுகிறான் என்பதை,

கரவாடும் வன்நெஞ்சர்க்கு அரியானைக் கரவார்பால்

இரவாடும் பெருமானை என்மனத்தே வைத்தேனே

என்ற பாடலூடாக திருநாவுக்கரசர் எடுத்துக் காட்டுகின்றார் (Thirunavukkarasar, 2009).

அதாவது சிவன் வஞ்சனையுடைய கொடிய நெஞ்சம் உடையவர்களுக்கு அறியார் அத்தகைய வஞ்சனை கொள்ளாத அன்பர்களின் உள்ளத்தில் மகிழ்ந்து குடி கொண்டு விளங்குபவர் "அவர் அரவாட, சடைமுடி பரந்து விழ அழகிய கையில் நெருப்பை ஏந்தி நள்ளிருள் நடனம் புரிகிறான் என்கிறார்" திருநாவுக்கரசர்.

இறைவன் தெளிவுடைய பல பூதகணங்களுடன் செறிந்த இருளில் நடனத்தைப் புரிகின்றான் என்பதை,

தெள்ளிய பேய்பல பூதம் அவற்றொடு

நள்ளிருளில் நாட்டமது ஆடல் நவின் றோ

என்ற பாடலூடாக சுந்தரமூர்த்திநாயனார் எடுத்துக் காட்டுகின்றார் (Sundarar, 2009).

மேலும் இறைவன் தீயில் நின்று ஆடுவார் என்பதை,

தீயாடி யார்சினக் கேழலின்

என்ற மாணிக்கவாசகரின் பதிகவரி காட்டி நிற்கின்றது (Manikkavasaka Swamikal, 2009).

இறைவனின் நள்ளிரவு ஆடல் பற்றி சிவபுராணத்தில்

நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே

தில்லையில் கூத்தனே

என்ற வரிகளினூடாக மாணிக்கவாசகர் வெளிப்படுத்துகின்றார் (Manikkavasaka Swamikal, 2009).

இறைவனின் பல்வேறு ஆடல்வடிவங்களை நாயன்மார்கள் தமது பதிகங்களில் அழகாக எடுத்துக் காட்டியிருக்கின்றனர் (Thirugnanasambanda Swamigal, 2007a). இறைவன் ஆயிரக்கணக்கான வாத்தியங்கள் புடைசூழ தனது திருநடனத்தை நிகழ்த்துகிறார் என்பதை,

ஆடல்புரித்த நிலையும் அரையில் அசைத்த அரவும்

பாடல் பயின்ற பல்பூதம் பல்லாயிரங்கொள் கருவி

நாவுக்கரசர் தனது திருவாரூர்ப் பதிகத்தினூடாக எடுத்துக் காட்டுகின்றார் (Thirunavukkarasar, 2009).

ஆரூரில் பரந்த சடையுடன் இறைவன் சிலம்பின் ஒலி பரவத் திருவடியைத் தூக்கி ஆடுகின்றார் என்பதை,

சிலம்பலம் பாவரு சேவடி

யான்திரு மூலட்டானம்

என்ற பதிகத்தால் நாவுக்கரசர் எடுத்துக்காட்டுகிறார் (Thirunavukkarasar, 2009).

இறைவனின் ஆடல் பேருவகை அளிக்கும் தன்மையுடையது என்பதை "எண்டிசை யோகும் ஏத்த இறவை நீயாடுமாறே" என்கிறார் நாவுக்கரசர்.

இறைவன் தன் நீண்ட கைகளிலே வீணையை ஏந்தி, ஆடுகின்ற அரவத்தைப் பூண்கின்ற ஆரமாகவும், கிண்கிணி அணிந்து நெருப்பினை கையிலே ஏந்தி ஆடுகின்றார் என்பதை,

ஆடரவக் கிண்கிணிகால் அன்னானோர் சேடனை

ஆடும்தீக் கூத்தனை நான் கண்டது ஆரூரே

என்ற ஆரூர் பதிகத்தினூடாக நாவுக்கரசர் எடுத்துக் காட்டுகின்றார் (Thirunavukkarasar, 2009).

மேலும் "கூத்தப் பெருமானே உன்னுடைய கூத்தைக்காண நான் வந்துள்ளேன்" என்று விளிப்பது இறைவனை நாவுக்கரசர் கூத்தனாகப் பார்த்தமையைக் காட்டி நிற்கின்றது. இறைவன் எம்முள்ளத்தில் புகுத்து நம்மை ஆட்கொண்டால் நமது வினைகள் யாவும் எம்மை விட்டு ஓடிப்போகும் என்பதை,

ஆடிப்பாடி அண்ணாமலை கைதொழ

ஓடிப்போம் நமது உள்ள வினைகளே

நாவுக்கரசர் மேற்படி பதிகத்தினூடாக வெளிப்படுத்தி நிற்கின்றார் (Thirugnanasampanthamurthy, 2009).

இறைவன் பாடலும் ஆடலும் கொண்டிலங்குகிறார் என்பதை,

பணங்கெழுவு பாடவினொடு ஆடல்பிரி

யாதபர மேட்டிபகவன்

என்ற பதிகத்தால் திருஞானசம்பந்தர் எடுத்துக் காட்டுகின்றார். (Thirugnanasampanthamurthy, 2009)

இறைவன் அரிய வேதங்களை ஓதியவர். ஐந்தொழிலையும் ஆற்றும் திருநடனத்தை புரிபவர் என்பதை,

பாடினார் அருமறை முறைமுறை பொருளென அருநடம்

ஆடினர் உலகிடை

சம்பந்தர் மேற்படி வரிகளினூடாக எடுத்தக் காட்டுகின்றார் (Thirugnanasampanthamurthy, 2009).

சிவனின் நடனமானது ஐந்தொழில் ஆற்றும் திறனுடையது என்னும் சிறப்பு இங்கு குறிப்பால் காட்டப் பெற்றுள்ளது, இது 'பொருளென அரு நடம் ஆடினார்' என்றும் 'அஞ்செழுத்தே ஆனந்த தாண்டவமும்' என ஐந்தெழுத்தான திரு நடனத்தைச் சுட்டுவதாக அமைகிறதுள்ளது. மனவாசம் கடந்தார் அருளிய உண்மை விளக்கத்தில் (திருப்பாட்டு 45) "திருவைந்தெழுத்தானது நடராஜப் பெருமானின் வடிவமே" எனச் சுட்டப்படுவதனை காணமுடிகிறது. பஞ்சகிருத்தியங்களில் ஆற்றும் அருள்நிலையினை,

தோற்றம் துடியதனில் தோயும் திதியமைப்பில்

சாற்றிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமா

ஊன்று மலர்ப்பதத்தில் உற்ற திரோ தம்முத்தி

நான்ற மலர்ப்பதத்தே நாடு

என்ற உண்மை விளக்கத் திருப்பாட்டு 36 எடுத்துக் காட்டுகின்றது.

பல்வேறு திருக்கோயில்களிலும் பாடப்பட்ட பதிகங்களில் இறைவனின் பல்வேறு ஆடற்சிறப்புக்கள் பேசப்படுகின்றன அறையணி நல்லூரில் வீற்றிருக்கும் இறைவன் பற்றி சம்பந்தர் ஆடினாரறை யணி நல்லூர் எனப்பாடுகின்றார் (Thirugnanasampanthamurthy, 2009).

காவிரி வடகரையிலுள்ள தலங்களில் முதல் திருத்தலம் சிதம்பரம். தில்லைவனம், பெரும்பற்றப்புலியூர் என அழைக்கப்படும் இந்தக் கோயிலில் இறைவன் ஐந்து சபைகளான பேரம்பலம், சிற்றம்பலம், கனகசபை, நிருத்தசபை, இராஜசபை போன்றன அமையப் பெறுகின்றன. பஞ்ச சபைகளில் இது பொற்சபை. பஞ்சபூதத்தலங்களில் ஆகாயம் இதுவாகும். இங்கு வீற்றிருக்கும் நடராசர், அம்பலவாணர், கனகசபாபதி, கூத்தபிரான், திருமூலட்டநாதன் என்றெல்லாம் அழைக்கப்படுகின்றார். இவர் மீது சம்பந்தர் தன் இறையுணர்வை வெளிப்படுத்தி பாடல்களைப் பாடியுள்ளமை ஆடற் கூத்தனின் ஆடல் சிறப்புக்களை இறையியலோடு காணும் பேற்றினை எமக்களிக்கின்றன.

சிவபூசையில் ஓதப்பெறும் திருப்பாசுரத்தில் ஆடற்கூத்தனின் ஆடற்கோலத்தை பின்வரும் வரிகளிலுள்ள

ஆடினாய் நறுநெய்யொடு பால்

'ஆடினாய்' என்ற சொல் எடுத்து இயம்புகின்றது.

இறைவன் தில்லைவாழ் அந்தணருள் ஒருவராய் திகழ்கின்றார் என்ற உண்மையும் அப்பெருமான் திருநடனம் புரியும் சபையானது சிற்றம்பலம் என்பதும் அப்பெருமானைக் கண்டு தரிசிக்க முக்திநிலை கிடைக்கும் என்பதும் 'அந்தணர் பிரியாத சிற்றம்பலம் நாடினாய்' எனும் வரிகளால் உணர்த்தப்படுகின்றது (Thirugnanasambanda Swamigal, 2009). மேலும் பாண்டரங்கக் "கூத்தாடியநாதனே ஆடல்புரியும் நடராஜப் பெருமானே" என சம்பந்தர் தன் பாடல்களில் இறைவனை விழிக்கின்றார்.

இறைவன் எல்லா அண்டங்களிலும் இருக்கும் தேவர்கள் தொழ திருநடனம் புரிகிறார் என்பதை திருவீழிமிழலை இறைவன் மீது பாடப்பட்ட திருஞானசம்பந்தரின் பாடல் எடுத்து இயம்புகின்றன (Thirugnanasambanda Swamigal, 2007a; Thirugnanasambanda Swamigal, 2007b). இடபம் பொறித்த வெற்றிக் கொடியை ஏந்தி வீரம் மிக்க பூதகணங்கள் சூழ நடனக்கோலம் தாங்கி திருநடனம் புரியும் இறைவன் திருப்புனவாயிலில் வீற்றிருக்கின்றார் என்றும் உமாதேவி இசைபாட அவ் இசைக்கேற்ப இறைவன் புனவாயிலில் வீற்றிருந்து நடனம் புரிகின்றான் போன்ற விடயங்களினை திருஞானசம்பந்தரpன் பாடல்களினூடாக அறிந்து கொள்ள முடிகின்றது. இதுபோன்ற பல்வேறு பதிகங்களில் இறையியலோடிணைந்த ஆடல் பற்றிய குறிப்புக்கள் பாடல்கள் விரவிக் கிடக்கின்றன.

## முடிவுரை

இறையியலியல் சுட்டும் ஆடல் என்ற ஆய்வானது நாயன்மார்கள் நால்வரில் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகிய இருவரின் பதிகங்களி|னூடாக வெளிப்படுத்தப்பட்ட இறையியலோடு சேர்ந்த ஆடல் செய்திகளை இயன்றவரை கண்டறிந்துள்ளது. இங்கு கண்டறியப்பட்ட இறையியலில் பொதிந்து கிடக்கும் ஆடற்கோலங்கள் எதிர்கால ஆய்வாளருக்கு கால்கோளாக அமையும்.

## References


Alphonsa, T., (1985) Iraiyila Athu Enna Marai Aruvi, St Joseph's Press education institute, Trichy, India.

Manikkavasaka Swamikal, (2009) Thevaram Panniru Thirumuraikal Volume-10, Varthamanan Pathippagam, Chennai, India.

Sundarar, (2009) Thevaram Panniru Thirumuraikal Volume-10, Varthamanan Pathippagam, Chennai, India.

Thirugnanasambanda Swamigal, (2007a) Thevaram Panniru Thirumuraikal Volume-06, Varthamanan Pathippagam, Chennai, India.

Thirugnanasambanda Swamigal, (2007b) Thevaram Panniru Thirumuraikal Volume-07, Varthamanan Pathippagam, Chennai, India.

Thirugnanasampanthamurthy, (2009) Thevaram Panniru Thirumuraikal Volume-04, Varthamanan Pathippagam, Chennai, India.

Thirunavukkarasar, (2009) Thevaram Panniru Thirumuraikal Volume-07, Varthamanan Pathippagam, Chennai, India.

Valviyar kalanjiyam, Volume-12 (2002) Tamil University, Thanjavur, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License